## நவம்பர் – 16 – வியாழன்
### புனித இஸ்கொட்லான்ட் மாகிறட்

**முதல் வாசகம் : சாலமோனின் ஞானம் 7 : 22 - 8 : 1**

ஞானம் எதிர்க்கமுடியாதது. நன்மை செய்வது. மனிதநேயம் கொண்டது. நிலைபெயராதது. உறுதியானது. வீண்கவலை கொள்ளாதது. எல்லாம் வல்லது. எல்லாவற்றையும் பார்வை யிடுவது. அறிவும் தூய்மையும் நுண்மையும் கொண்ட எல்லா உள்ளங்களையும் ஊடுருவிச் செல்வது. ஞானம். அசைவுகள் எல்லாவற்றையும்விட மிக விரைவானது. அதன் தூய்மையினால் எல்லாவற்றிலும் நிரம்பி நிற்கிறது. எல்லாவற் றையும் ஊடுருவிச் செல்கிறது. ஞானம். கடவுளின் ஆற்றலிலிருந்து புறப்படும் ஆவி எல்லாம் வல்லவரின் மாட்சியிலிருந்து எழும் தூய வெளிப்பாடு. எனவே மாசுபட்டது எதுவும் அதனுள் நுழைய முடியாது. ஞானம் என்றுமுள ஒளியின் சுடர். கடவுளது செயல்திறனின் கறைபடியாக் கண்ணாடி அவருடைய நன்மையின் சாயல்.. ஞானம் ஒன்றே என்றாலும், எல்லாம் செய்ய வல்லது. தான் மாறாது, அனைத்தையும் புதுப்பிக்கிறது. தலைமுறைதோறும் தூய ஆன்மாக்களில் நுழைகிறது. அவர்களைக் கடவுளின் நண்பர்கள் எனவும் இறைவாக்கினர்கள் எனவும் ஆக்குகிறது. ஞானத்தோடு வாழ்கின்றவர்கள்மீது அன்பு செலுத்துவது போல வேறு எதன்மீதும் கடவுள் அன்பு செலுத்துவதில்லை. ஞானம் கதிரவனைவிட அழகானது. விண்மீன் கூட்டத்திலும் சிறந்தது. ஒளியைக் காட்டிலும் மேலானது. இரவுக்குப் பகல் இடம் கொடுக்கிறது. ஆனால், ஞானத்தைத் தீமை மேற்கொள்ளாது. ஞானம் ஒருகோடி முதல் மறு கோடிவரை ஆற்றலோடு செல்கிறது. எல்லாவற்றையும் முறையாக ஒழுங்குபடுத்துகிறது.

**பதில்பாடல் :** ஆண்டவரே என்றென்றும் உள்ளது உமது வாக்கு

**நற்செய்தி : லூக்கா 17 : 20 - 25**

அக்காலத்தில் இறையாட்சி எப்போது வரும் என்று பரிசேயர் இயேசுவிடம் கேட்டனர். அவர் மறுமொழியாக, ”இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது. இதோ, இங்கே! அல்லது அதோ, அங்கே! எனச் சொல்லமுடியாது. ஏனெனில், இறையாட்சி உங்கள் நடுவேயே செயல்படுகிறது” என்றார். பின்பு அவர் சீடர்களை நோக்கிக் கூறியது ”ஒரு காலம் வரும் அப்போது மானிட மகனுடைய நாள்களில் ஒன்றையாவது காண நீங்கள் ஆவலாய் இருப்பீர்கள். ஆனால் நீங்கள் காணமாட்டீர்கள். அவர்கள் உங்களிடம், ”இதோ, இங்கே! அல்லது அதோ, அங்கே!” என்பார்கள். ஆனால் நீங்கள் போகவேண்டாம் அவர்களைப் பின் தொடரவும் வேண்டாம். வானத்தில் மின்னல் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வரைக்கும் பளீரென மின்னி ஒளிர்வது போல மானிடமகனும் தாம் வரும் நாளில் தோன்றுவார். ஆனால் முதலில் அவர் பல துன்பங்கள் பட்டு இந்தத் தலைமுறையினரால் உதறித் தள்ளப்பட வேண்டும்.

**தியானம்:** மனிதனின் ஞான வாழ்க்கையானது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் முற்றுப்பெற்று தேங்கி நிற்பதல்ல. மாறாக நாளுக்கு நாள் ஊக்கம் பெற்று வழர்ச்சி காண வேண்டியது. நாம் நமது சிறு வயது பிராயத்தில் எமக்கு இருந்த ஞான அறிவும், பின்பு வளர்ச்சி அடைந்து முதிர்சிசி பெறும் பருவத்தில் எமக்கு இருக்கம் ஞானத்திற்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கும்?. கிறிஸ்தவ ஞான வாழ்வில் நாம் வளர்ச்சியடைய வேண்டுமென்றால் எம்மிடம் மனத்தாழ்ச்சி, கனிவு, பொறுமை, அன்பு, அமைதி என்பன குடிகொள்ள வேண்டும். நாங்கள் மனிதர் மட்டில் காட்டும் அன்பானது ஆழம், அகலம், உயரம் என்பவற்றிற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.. கிறஸ்தவ சாயலை தாங்கிக்கொண்டால் நாம் ஞான வாழ்வில் முழுமை பெறலாம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் பரிசேயர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இயேசு எப்போது உயிர்த்தாரோ அப்போதே எம் மத்தியில் நிற்கின்றார். ஆனால் எமக்கு தீர்ப்பு அளிக்கும் நாள் எப்போது வரும் என்று எவருக்கும் தெரியாது. ஆண்டவருடைய நாள் திருடனைப்போல் வரும். வானங்கள் பெரும் முழக்கத்துடன் மறைந்தொழியும். பஞ்ச பூதங்கள் வெந்துருகிப் போகும். மண்ணுலகும் அதன் செயல்களும் தீக்கிரையாகும். இவையாவும் அழிந்து போகுமாதலால் நீங்கள் தூய இறைப்பற்றுள்ள நடத்தையில் சிறந்து விளங்க வேண்டும். (2பேதுரு3:10–12) ஆகவே நாம் எல்லோரும் மனம் மாறவேண்டும். உலக நிந்தனை , வீணான என்ணங்கள், பேராசை, காமம் எனபவற்றினை விடுத்து ஞான வாழ்வில் வளர்ச்சியடைந்து இறைவனின் வருகைக்கு எம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். “உதவி ஆண்டவரிடம் இருந்து வரும் உன் கால் இடற விடமாட்டார், உன்னைக் காக்கும் அவர் உறங்க மாட்டார்”